IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO. 105/2021

Deposition of Witness for P.W.16

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.A.கருணாகரன் |
| FATHER'S NAME | - | திரு. |
| ADDRESS | - | |
| OCCUPATION | - | காவல் ஆய்வாளர் |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 19.09.2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை-**

1. நான் தற்போது சென்னை மாநகரம், நுங்கம்பாக்கம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.01.2021ம் தேதி வேலூர் தாலுக்கா காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்த போது வேலூர் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் செந்தில்குமார் என்பவர் மருத்துவ விடுப்பில் சென்றதால் வேலூர் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் பொறுப்பு உயர் அதிகாரிகளால் எனக்கு கொடுக்கப்பட்டது. அன்றைய தேதியில் காலை 09.00 மணிக்கு ரஞ்சித், கிராம நிர்வாக அலுவலர் வட வேலூர் கிராமம் பொறுப்பு நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று உதவி ஆய்வாளர் ராஜசேகர் 11.01.2021ம் தேதி காலை 09.00 மணிக்கு வேலூர்

வடக்கு காவல் நிலைய குற்ற எண் 26/2021 சட்டப்பிரிவு 174 குவிமுச-ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். முதல் தகவல் விசாரணை அறிக்கையை பெற்று சம்பவ இடம் சென்று பார்வையிட்டதில் பாலாறு எரிமேடை பின்புறம் ஒரு மனித உடல் கால் மட்டும் தென்படவே சந்தேகப்படும்படியாக புதைக்கப்பட்டுள்ளது. தோண்டி எடுத்து அடையாளம் பார்ப்பதற்காக வேலூர் வட்டாச்சியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் ஒன்று அனுப்பினேன். வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் திரு.ரமேஷ், வேலூர் வட்டாச்சியர் அவர்கள் 11.01.2021ம் தேதி காலை 11.00 மணிக்கு சம்பவம் இடம் வந்து மேற்படி பிரேதத்தை வெளியில் தோண்டி எடுத்து அக்கம் பக்கம் விசாரிக்க மேற்காணும் இறந்து போன நபர் தோட்டபாளையத்தை சேர்ந்த வேலு என்பவர் என்று தெரியவந்ததால், வேலுவின் மனைவி ஈஸ்வரி மற்றும் அவரது மகன்களுக்கு தகவல் சொல்லி அழைத்து வரப்பட்டு, இறந்து போனது வேலு தான் என அடையாளம் காட்டப்பட்டு ஊர்ஜிதம் செய்யப்பட்டது. மேலும் இறந்து போன வேலுவின் மனைவியை விசாரித்த போது 10.01.2021ம் தேதி வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் தனது கணவர் காணவில்லை என புகார் கொடுக்கப்பட்டு, குற்ற எண் 23/2021 சட்டப்பிரிவு Man Missing என வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நிலுவையில் இருந்தது. வட்டாச்சியர் முன்னிலையில் வேலூர் மருத்துவக்கல்லூரி மருத்துவர் நாகேந்திரகுமார் அவர்கள் பிரேம் அழுகிய நிலையில் இருந்ததால் சம்பவ இடத்தில் வைத்து வேலூர் வட்டாச்சியர் தலைமையில் மாலை 16.25 மணிக்கு பிரேத கூராய்வு மேற்கொண்டார். எனவே, வட்டாச்சியர் அவர்களின் அறிக்கையை பெற்று அதே தேதியில் சட்டப்பிரிவு 174

குவிமுச வில் இருந்து 302, 201 இதச படி பிரிவு மாற்றம் செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ-16** ஆகும். மேலும் சம்பவ இடத்தில் மருத்துவ பரிசோதனை முடிந்து கொலை செய்யப்பட்டு இறந்து போன வேலு என்பரிடமிருந்து எடுக்கப்பட்ட 1) ரத்த கரை மற்றும் மண் கரை படிந்த புளூ கலர் கட்டம் போட்ட லுங்கி ஒன்று, 2) ரத்த கரை மற்றும் மண் கரை படிந்த சிவப்பு கலர் அரை கை சட்டை ஒன்று. 19.00 மணிக்கு படிவம் 91 மூலம் பெறப்பட்டு, நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. 20.00 மணிக்கு சாட்சிகள் நிஷாந்தி, வெங்கடேசன் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு டார்ச்லைட் வெளிச்சத்தில் மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து, சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். சாட்சிகள் ரஞ்சித், ஜீவரத்தினம், ஆனந்தன், கௌதமன், ஈஸ்வரி, சிலம்பரசன், பிரகாஷ்ராஜ், வெங்கடேசன், பிச்சாண்டி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 12.01.2021ம் தேதி மேற்கண்ட வழக்கு சம்மந்தமாக மீண்டும் ஈஸ்வரி, சிலம்பரசன், பிரகாஷ்ராஜ், முனுசாமி, தேவகுமார், ஜான்சிராணி ஆகியோர்களை விசாரணை செய்தேன். ஜான்சிராணியின் விசாரணையின் அடிப்படையில் எதிரிகள் ஜெகன், மணிகண்டன், அலெக்ஸ் ஆகியோர்களை 14.01.2021ம் தேதி காலை 09.00 மணிக்கு வேலூர் பழைய பைபாஸ் ரோடு சிக்னல் அருகே சாட்சிகள் சுந்தரம் மற்றும் ராஜசேகர் முன்னிலையில் கைது செய்து எதிரி ஜெகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 09.10 மணி முதல் 10.10 வரை பதிவு செய்தேன். 10.10 மணிக்கு எதிரி மணிகண்டனின் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். 11.10 மணிக்கு எதிரி

அலெக்ஸின் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.17** ஆகும். 2ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.18** ஆகும். 3ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.19** ஆகும். ஒப்புதல் வாக்குமூல தகவலின் அடிப்படையில் எதிரிகள் எங்களை வேலூர் பாலாறு சுடுகாடு அருகே கூட்டிச்செல்லும்போது தகவலின் பேரில் அன்றே 13.00 மணிக்கு எதிரி பாலகிருஷ்ணனை வேலூர் கோட்டை காந்தி சிலை அருகே கைது செய்து அதே இடத்தில் அதே சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். 4வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.20** ஆகும். நான்கு எதிரிகளையும் போலீசார் மற்றும் சாட்சிகளை சம்பவ இடத்திற்கு கூட்டி சென்று இடத்தை காண்பித்து வேலூர் - காட்பாடி ரோடு பாலாறு பாலத்திற்கு அருகில் 1ம் எதிரி ஜெகன் இரண்டு கத்திகளை புதரிலிருந்து எடுத்து ஆஜர் செய்ததை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு ஒப்புவித்தேன். 15.01.2021ம் தேதி சாட்சிகள் தாமோதரன், ராஜி, வேலு, சிவசங்கர் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வேலூர் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் செந்தில்குமார் பொறுப்பேற்றுக்கொண்டதால் வழக்கு கோப்புகளை ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் செந்தில்குமார் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

11.01.2021ம் தேதி புகார், முதல் தகவல் அறிக்கை மற்றும் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அன்றே நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். குற்ற எண் 23/2021 இறந்த நபரின் மனைவி ஈஸ்வரி தனது கணவர் காணவில்லை என்று கொடுத்த புகார் நீதிமன்றத்திற்கு அன்றே அனுப்பினேனா என்றால் உதவி ஆய்வாளர் அனுப்பியிருப்பார். குற்ற எண் 23/2021 இறந்த வேலுவை காணவில்லை என அவர் மனைவி கொடுத்த புகாரில் அவரது மனைவி ஈஸ்வரி தனது கணவர் 04.01.2021 இரவு 09.00 மணிக்கு எங்களுடைய வீட்டிலிருந்து அவருடைய TN-02-AA-6033 Scooty pept இருசக்கர வாகனத்தை அவர் ஓட்டிக்கொண்டு எங்களிடம் எங்கு செல்கிறேன் என்று சொல்லாமல் சென்றவர் என்று குறிப்பிட்டுள்ளாரா என்றால் சரி. வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் 10.01.2021 அன்று நான் பொறுப்பில் இருந்தேன். பிரேதம் தோண்டும் போது தலை எந்த திசையில் இருந்தது, கால் எந்த திசையில் இருந்தது என்று தற்போது நினைவில்லை. எனது விசாரணையில் கௌதமன் வாய்மொழியாக புகார் போலீசாரிடம் பிரேதம் புதைக்கப்பட்டிருந்தது என சொல்லவில்லை. புகாராக சொல்லவில்லை ஆனால் விசாரணையின் போது வாக்குமூலம் அளித்தார். என்னுடைய விசாரணையில் கௌதமன் காலை 06.30 மணிக்கே புகார் கொடுத்ததாக சொல்லவில்லை. அ.சா.3 சிலம்பரசன் அவருடைய அப்பா 04.01.2021 தேதியில் மாலை 03.00 மணிக்கு மேல் என் அம்மாவிடம் சொல்லாமல் என் அப்பா Scooty pept அதன் பதிவு எண் TN-02-AA-6033 என்ற வாகனத்தில் வீட்டிலிருந்து சென்றார், அதன் பிறகு வீட்டிற்கு வரவில்லை என்று எனது விசாரணையில் சொல்லவில்லை. 10.01.2021 தேதியில் வேலூர் வடக்கு காவல்

நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், நானும், அம்மா, தம்பி ஆகியோர் என் அப்பா காணவில்லை என புகார் கொடுத்ததாக அ.சா.3 சிலம்பரசன் எனது விசாரணையில் சொல்லியுள்ளார். அ.சா.3 சிலம்பரசன் அவருடைய அப்பா இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் ஜான்சிராணியிடம் எதிரி பரசுராமன் காரை கூட்டுரோட்டில் என் அப்பாவை சும்மா விடமாட்டேன் என்றும் மிரட்டியதாக எனது விசாரணையில் சொல்லவில்லை. ஜான்சிராணி எதிரிகளின் மீது அவரது அப்பாவை ஏற்கெனவே மிரட்டியதற்காக புகார் எதுவும் கொடுக்கவில்லை. அ.சா.8 வேலு 04.01.2021ம் தேதி மாலை சுமார் 05.00 மணிக்கு வேலு, ஜெகன், அலெக்ஸ், மணிகண்டன், பரசுராமன், மகேஷ் வாக்குவாதம் செய்துகொண்டிருந்ததாக பார்த்ததாக சொன்னார். சாட்சி வேலு, இறந்து போன வேலுவின் தங்கை கணவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சாட்சி வேலு இறந்து போன வேலுவின் நெருங்கிய உறவினர் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று சொன்னால் சரியல்ல. சாட்சி வேலு இறந்து போன வேலுவை 04.01.2021ம் தேதி மாலை 05.00 மணிக்கு பார்த்ததாக சொல்வது பொய் என்றும், குற்ற எண் 23/2021ல் இறந்து போன வேலு காணவில்லை என்று அவரது மனைவி ஈஸ்வரி கொடுத்த புகாரில் 04.01.2021 இரவு 09.00 மணிக்கு கணவர் வீட்டிலிருந்து இருசக்கர வாகனத்தில் சென்றார் என்று புகார் கொடுத்துள்ளார் என்றும், வழக்கிற்காக சாட்சி வேலு இறந்த வேலுவை கடைசியாக 04.01.2021ம் தேதி மாலை 05.00 மணிக்கு பார்த்தார் என வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கெனவே 1ம் எதிரியின் மச்சான் அஜய் கால்வாயில் இறந்த வேலு தள்ளி கொலை செய்திருப்பார் என்ற உள்நோக்கத்திற்கு அஜய்

கால்வாயில் விழுந்து இறந்தார் என்பதற்கு சந்தேக மரணம் குவிமுச 174 முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளோமா என்றால் அது 2020ம் வருடம் நடந்தது அது பற்றி எனக்கு தெரியவில்லை. அ.சா.11 ராஜசேகர் அ.சா.8 வேலுவின் மகன் என்றால் சரிதான். 1 முதல் 3 எதிரிகளை வேலூர் பழைய பைபாஸ் ரோட்டில் வைத்து காலை 09.00 மணிக்கு கைது செய்தேன். எதிரிகளை மக்கான் ரோடு மார்கமாக போகும்போது கைது செய்தேன். அந்த இடம் பொதுமக்கள் அதிகமாகவும் ஜனநடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரி. அதன் தொடர்ச்சியாக நிறைய கடைகள் உள்ளது என்றால் சரி. அந்த இடத்திலிருந்து இருபுறமும் அரை கி.மீ தொலைவில் இரண்டு கிராம நிர்வாக அலுவலகம் உள்ளது என்றால் சரி. எதிரிகளை கைது செய்யும் போது அரசு பணியில் உள்ளவர்கள் முக்கிய பணியாக அவர்கள் உள்ளதால் சாட்சியாக நான் சேர்க்கவில்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த விதமான சம்மந்தமும் கிடையாது என்றும், இறந்து போன வேலுவிற்கும் எதிரிகளுக்கும் எந்த விதமான முன்விரோதமும் கிடையாது என்றும், வழக்கு எந்த விதத்திலும் கெட்டுவிடக்கூடாது என்பதற்காக எதிரிகளை இந்த வழக்கில் ஜோடித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றும், எவ்வித வழக்கு சொத்துக்களையும் எதிரிகள் எடுத்து ஆஜர் செய்யவில்லை என்றும், எதிரிகள் எந்த வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் இறந்து போன வேலுவின் உறவினர்களை மட்டுமே சாட்சியாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சி ஈஸ்வரி இறந்த வேலுவின் மனைவி, இறந்த வேலுவின் மகன்

பிரகாஷ்ராஜ், சிலம்பரசன் என்றால் சரி. இறந்த வேலுவின் அண்ணன் முனுசாமி, மருமகன் தேவகுமார், தேவகுமாரின் மனைவி ஜான்சிராணி என்றால் சரி. ராஜசேகர் இறந்த வேலுவின் தங்கை மகன். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 19.09.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN

Additional District Judge(FTC),
Vellore